கிறேன். அவர்களைப் பற்றி இனிமேல் நாட்டு மக்கள் புரிந்து கொள்வார்கள். ஜனங்களைப் பற்றி புரியாதவர்கள் ஜனநாயகத்தை வெளியிலே பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-20)

(ஈ) இரணியல் மின் வாரிய உதவிக் கோட்டத்தை குழித்துறை கோட்டத்தோடு இணைத்ததால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏப். எம். இராசரத்தினம், "குமரி மாவட்டம், இரணியல் மின் வாரிய உதவிக் கோட்டம், தக்கலை மின்வாரிய கோட்டத்தில் இருந்து மாற்றி கேரள எல்லைக்கு அருகில் உள்ள குழித்துறை கோட்டத்தோடு இணைத்ததால் அப்பகுதி மக்கள் நிலை குறித்த" கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றைக் கொடுத்துள்ளார். அவர் இருக்கையில் இல்லை. அதற்கான அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பெற்றுள்ளது.

அறிக்கை.

கன்னியாகுமரி மின் அமைப்பில் தக்கலை கோட்டத்தில் வேலைப்பளு அதிகமாக இருந்ததால் கூடுதலாக ஒரு புதிய கோட்டம் குழித்துறையில் உருவாக்கப்பட்டது. ஆகவே இரணியல் உட்கோட்டம் குழித்துறை கோட்டத்துடன் இணைக்கப்பட்டது.

இரணியல் உட்கோட்டத்தின் பிரிவுகள் (செக்ஷன்ஸ்) இரணியல் உட்கோட்டம் ஆகியவற்றின் தலைமையிடங்கள் எதுவுமே மாற்றப்படவில்லை. அதனால் மின் நுகர்வோர்களுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை.

(உ) முதுமலை சரணாலயத்தில் யானைகள் சுட்டுக் கொல்லப்படுவது குறித்து.

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடந்த ஒரு மாத காலத்திற்குள் உலகப் புகழ் பெற்ற சுற்றுலா ஸ்தலமான முதுமலை சரணாலயத்தில் 10-க்கும் மேற்பட்ட யானைகள் சுட்டுக் கொல்லப்பட்டதால் அப்பகுதியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசர, பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.